சுருக்கம்

நிர்வாகம் – திரு. எஸ்.அசோக்குமார் ஆண் செவிலிய உதவியாளர் (நிலை–2), கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை – விதித்தளர்வு செய்து பணி வரன் முறைபடுத்துதல் — ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (சி2) துறை

அரசாணை (நிலை) எண்.86

நாள். 04.03.2014
விஜய, மாசி 20,
திருவள்ளுவர் ஆண்டு 2045,

படிக்க:

மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித எண் 62818 / நி4 / 2 / 2008, நாள் 08.12.2011.

-------

**ஆணை:**

மருத்துவக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில், திரு. எஸ்.அசோக்குமார் என்பவர் சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பதிலிப் பணியாளராக 07.12.1984 முதல் நியமிக்கப்பட்டார் எனவும், பின்னர் மருத்துவமனையின் அவசர தேவையை கருத்தில் கொண்டு, 01.01.1991 முதல் ஆண் செவிலியர் உதவியாளர் நிலை–2ஆக நியமிக்கப்பட்டார் எனவும், மேலும் இவர் பதிலிப் பணியாளராக நியமிக்கப்படும்போது இவருடைய வயது 26 வருடம் என்றும், பின்னர் செவிலிய உதவியாளர் நிலை–2ஆக நியமிக்கப்படும்போது, அன்னாரின் வயது 32 வருடங்கள் 8 மாதம் என்றும், மேற்படி பணி நியமனத்தின்போது தனியர் உச்ச வயது வரம்பினை கடந்துவிட்டாலும், பதிலிப் பணியாளராக நியமிக்கப்படும்போது உரிய வயது வரம்பிற்குள் இருந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அரசாணை எண்.528, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள்.16.10.88–ன்படி, இவர் முதல் பணிநியமனத்தின் போது வயது வரம்பிற்குள் இருந்ததால், இவருக்கு வயது விதித்தளர்வாணை தேவையில்லை எனவும், இவர் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் எனவும், எனவே, செவிலிய உதவியாளருக்கான கல்வித்தகுதியை பூர்த்தி செய்துள்ளார் என்றும், அவரது கல்வித்தகுதி உரிய அலுவலர் மூலம் சரிபார்க்கப்பட்டு உண்மை தன்மை வாய்ந்தது என சான்று பெறப்பட்டுள்ளது எனவும் மேலும் தனியர் 1.1.1991 முற்பகல் முதல் செவிலிய உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டிருந்தாலும், தனியர் செவிலிய உதவியாளருக்கான பயிற்சி (1.1.1991 முதல் 31.12.1991 வரை) முடித்த மறுநாள் 1.1.1992 முதல் பணி வரன்முறை செய்ய வேண்டும் எனவே இவ்விதியை தளர்வு செய்ய வேண்டியதில்லை, தனியர் எட்டாம் வகுப்பில் தேர்ச்சியும் பெற்றுள்ளார். மேலும், தனியரை பணிநியமனம் செய்யும்போது இன ஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் தனியர் செவிலிய உதவியாளராக நியமிக்கப்பட்ட பின்பு, செவிலிய உதவியாளராக பயிற்சி பெற்று தேர்ச்சி அடைந்துள்ளதால், செவிலிய உதவியாளர் பயிற்சி முடித்த மறுநாளான 01.01.1992 முதல் தனியரின் பணியினை பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

3. அரசு இந்நேர்வினை உரிய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலினை செய்தது. சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலிய உதவியாளர் நிலை–2 ஆக பணிபுரியும், திரு. எஸ்.அசோக்குமார், என்பவரது பணியினை, வரன்முறை செய்ய, வயது மற்றும் பணிநியமன விதிகளை தளர்வு செய்ய வேண்டியுள்ளது. தனியர் 7.12.1984–ல் பதிலிப் பணியாளராக நியமிக்கப்பட்டு ஆறு வருடங்கள் கழித்து அதாவது 1.1.1991 முதல் அரசாணை நிலை எண்.1866, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.8.11.1983–ன்படி செவிலிய உதவியாளர் நிலை.II ஆக பணிநியமனம் செய்யப்பட்டு, இன்று வரை தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். ஆகவே, தனியரின் பணியினை அன்னார் பொருட்டு வயது மற்றும் பணி நியமன விதிகளை தளர்வு செய்து அன்னார் செவிலிய உதவியாளர் பயிற்சி முடித்த மறுநாள் 1.1.1992 முற்பகல் முதல் செவிலிய உதவியாளர் நிலை 2 பணியிடத்தில் கருத்தியலாக (with notional benefit) பணி வரன்முறை செய்யவும், ஆணை வெளியிடப்படும் நாள் முதல் தனியருக்கு பணப்பயன் வழங்கவும் உத்தேசித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10 (இ)
தனியர் (மருத்துவக் கல்வி இயக்குநர் மூலமாக)
மாநில தலைமைக் கணக்காயர்,சென்னை–18.
The Resident Audit Officer (Sectt),
Office of the Principal Accountant General,
(TN & Pondicherry), Secretariat, Ch-9.

நகல்:
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இ.கோ / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்